


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், விநாயகர் சதுர்த்தி விழா மற்றும் விசர்ஜன ஊர்வலம் தொடர்பாக, முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (23.08.2016) நடைபெற்றது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. கு.தர்மராஜன் இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ ஆகியோர் உடனுள்ளனர்.

செ.வெ.எண்: 560/2016 நாள்: 23.08.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், விநாயகர் சதுர்த்தி விழா மற்றும் விசர்ஜன ஊர்வலம் தொடர்பாக முன்னேற்பாடு பணிகள் குறித்து, ஆலோசனைக் கூட்டம் இன்று (23.08.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், விநாயகர் சதுர்த்தி விழா மற்றும் விசர்ஜன ஊர்வலம் தொடர்பாக முன்னேற்பாடு பணிகள் குறித்து, மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (23.08.2016) ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

கடந்த ஆண்டு விநாயகர் சிலை வைத்து பூஜை செய்த அதே இடங்களில் தான் இவ்வருடமும் சிலை வைத்து பூஜை செய்ய வேண்டும். ஊர்வலங்கள் அனுமதிக்கப்பட்ட பாதைகள் வழியாகத்தான் செல்ல வேண்டும். ஊர்வலத்தின்போது காலந்தவறாமை கடைபிடிக்க வேண்டும். மாற்று இடம் தேர்வு செய்யப்பட்டிருப்பின் காவல்துறை அனுமதி பெற்ற பின்னரே, அவ்விடத்தில் சிலை வைக்க வேண்டும். சிலைகள் பூஜைக்கு வைக்கப்படும் இடத்தில் சிலை பாதுகாப்புக்கு நியமிக்கப்படும் நபர்கள் விபரத்தை சம்பந்தப்பட்ட காவல் ஆய்வாளரிடமும், நகல் கோட்டாட்சியருக்கும் 03.09.2016-க்கு முன்னதாக அனுப்பப்பட வேண்டும். சிலை அமைப்பாளர்களின் முகவரி மற்றும் தொலைபேசி எண், விவரம் தவறாது குறிப்பிட வேண்டும். விசர்ஜன விநாயகர் சிலை பாதுகாப்பு குழுவில் குறைந்தது 20 அங்கத்தினர்களாவது இடம் பெற வேண்டும். மேற்படியாளர்களின் பெயர் மற்றும் முகவரி தவறாமல் தாக்கல் செய்யப்பட வேண்டும். மேற்படி பாதுகாப்புக்குழுவில் இடம் பெற்றுள்ள குறைந்தது 5 அங்கத்தினர்களால் விசர்ஜன விநாயகர் சிலைகள் இரவு பகலாக உன்னிப்பாக கண்காணிக்கப்பட வேண்டும்.

விசர்ஜன விநாயகர் சிலையின் அருகாமையில் அச்சிலையின் விபரம், பாதுகாப்புக் குழு அங்கத்தினர்கள் விவரம், அவர்களின் பணி நாள் மற்றும் நேரம் தெளிவாக யாவரும் அறியும் வகையில் அட்டையில் எழுதப்பட்டு தொங்க விடப்பட வேண்டும். கூம்பு வடிவ ஒலிப்பெருக்கிகள் உபயோகிக்க முற்றிலும் தடை விதிக்கப்படுகிறது.

மேலும் ஒலிப்பெருக்கிகளை பொருத்தமட்டில் காவல்துறையினர் அனுமதி பெற்று தான் வைக்கப்பட வேண்டும். விநாயகர் சிலை வைத்து வழிபடும் இடங்களில் இரவு 10 மணி முதல் காலை 6.00 மணி வரை ஒலிபெருக்கி பயன்படுத்துவது தவிர்க்கப்பட வேண்டும். விசர்ஜன விநாயகர் சிலைகள் வைக்கப்பட்டுள்ள இடம் மற்றும் அதன் சுற்றுப்புறத்தில் போதிய மின் ஒளி அமைக்கப்பட வேண்டும். மசூதிகளின் அருகில் விநாயாகர் சிலை வைத்து பூஜை செய்யும் இடங்களில் முஸ்லீம்களின் தொழுகை நேரத்தின் போது ஒலிபெருக்கிகள் பயன்படுத்துவதை தவிர்த்து, பிற மதத்தினருக்கு எவ்விதங்களிலும் இடையூறின்றி செயல்பட வேண்டும். முஸ்லீம் மசூதிகள் அமைந்துள்ள பகுதிகள் வழியாக சிலை ஊர்வலம் செல்லும்போது, அவர்களின் மத உணர்வுகளை பாதிக்காத வண்ணம் ஊர்வலம் நடத்த அறிவுறுத்தப்பட்டது. மிடலாம் பகுதியை பொறுத்தவரை மீனவர்களின் வலை, வள்ளம் போன்றவை சேதப்படுத்தாத வண்ணம் சிலைகளை கடலில் கரைக்கப்படவேண்டும். தேங்காய்ப்பட்டணம் சாலையில் பாலூர் சந்திப்பில் கூடுதல் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். ஊர்வலம் புறப்படும் இடங்களில்

வாகனங்கள் வரிசையாக நல்ல முறையில் நிறுத்தப்பட வேண்டும். ஊர்வலத்தின் போது எடுத்துச் செல்லப்படும் சிலைகளின் உயரம் மற்றும் எண்ணிக்கை குறிப்பிட வேண்டும்.

ஊர்வலத்தில் பிறர் மனம் புண்படும்படியாகவோ, யாரையும் அவதூறாக பேசி சத்தமிடவோ கூடாது. சிலை கரைத்து விட்டு திரும்பும்போது பிறமத வழிபாட்டுதலங்களில் சட்டம் ஒழுங்கு பாதிக்காத வண்ணம் அமைதியாக செல்லும்படியும், காவல்துறைக்கு தகுந்த ஒத்துழைப்பு நல்கும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் ஊர்வலம் திரும்பும் போது சம்பந்தப்பட்ட வாகனங்கள் பிற மத வழிபாட்டு தலங்களின் வழியாக செல்லும்போது பிரச்சனைகள் ஏற்படாமல் தவிர்க்க ஊர்வலத்தில் சேர்ந்து கொண்ட வாகனங்கள் மற்றும் நபர்கள் பிரச்சனைக்கு இடமின்றி செல்வதாக உறுதிபடுத்தும் பொருட்டு, பிற மத வழிபாட்டுத் தலங்கள் அமைந்துள்ள பகுதிகளில் சிறப்பு கண்காணிப்பு மேற்கொள்ள காவல்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஊர்வல நாட்களில் வருவாய் துறையில் துணை ஆட்சியர்/வட்டாட்சியர் நிலையில் சட்டம் ஒழுங்கு நிலை நாட்ட Executive Magistrates பணியமர்த்தப்படுவர் எனவும், வட்டாட்சியர்கள் கழிந்த வருடங்களிலும், தற்போதும் பிரச்சனைக்குரிய பகுதிகளை அதிகமாக கண்காணிக்கப்படுவதோடு, பணியாளர்களை சுழற்சி முறையில் பணி நியமனம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், விநாயகர் விஜர்சன ஊர்வலம் செல்லும்பாதை, புறப்படும் நேரம், சிலைகளின் எண்ணிக்கை, வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் சட்டம், ஒழுங்கு பராமரிப்பு குறித்த அறிக்கையினை அன்றைய தினமே மாவட்ட நிர்வாகத்திற்கு தெரிவுபடுத்த வேண்டும். ஊர்வலம் செல்லும் பகுதிகளில் உள்ள டாஸ்மாக் மதுபானக் கடைகள் ஊர்வலம் நடைபெறும் நேரத்தின் போது அடைக்க உதவி ஆணையர், ஆயம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், மாவட்டத்தில் பதற்றமான இடத்தில் சட்டம், ஒழுங்கு பாதிப்பு எழாவண்ணம், கூடுதல் பாதுகாப்பு காவல்துறையினரால் அளிக்கப்பட வேண்டும் எனவும், சிலை வைக்கப்படும் இடத்தின் உரிமையாளரின் சம்பந்தப்பட்ட காவல்துறை அலுவலரிடமிருந்து எழுத்து வடிவிலான உறுதிமொழியை ஊர்வலம் நடத்த அனுமதி கோரும் விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும் எனவும், கழிந்த வருடங்களில் சிலை கரைப்பு ஊர்வலத்தின்போது, அகஸ்தீஸ்வரம் வட்டத்தில் இடலாக்குடி, தோவாளை வட்டத்தில் திட்டுவிளை, மாதவலாயம், கல்குளம் வட்டத்தில் திருவிதாங்கோடு, விளவங்கோடு வட்டத்தில் விழுந்தயம்பலம் பகுதியில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

பூஜைக்கு வைக்கப்படும் சிலைகள் Plastor of Paris கொண்டு செய்யப்படுவது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஆகவே மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலர்கள், சிலைகள் தயாரிக்கும் இடத்தில் உரிய ஆய்வு மேற்கொண்டு, இரசாயன பூச்சு எதுவும் உபயோகித்து விநாயகர் சிலைகள் அமைக்கப்படுகிறதா என்பதை கண்காணிக்கபடுவதோடு, களிமண் சிலைகள் மட்டுமே பயன்படுத்தப்படுத்துவதை உறுதி செய்ய வேண்டும். விநாயாகர் சிலை வைத்து பூஜை செய்யுமிடத்தில் ஓலை ஷெட் அமைக்கக் கூடாது. தீ தடுப்பு கூரைகள் அமைக்கப்பட வேண்டும். தண்ணீர், மணல் உள்ளிட்ட தீ தடுப்பான்கள் மேற்படி இடங்களில் வைத்து தகுந்த பாதுகாப்பு அளித்திடும்படி தீயணைப்பு மற்றும் மீட்பு துறை அதிகாரிகள் தேவையான நடவடிக்கை மேற்க்கொள்ள வேண்டும் எனவும், விநாயகர் சிலை கரைக்கும் கடற்கரை பகுதிகளான கன்னியாகுமரி, சொத்தவிளை, சங்குதுறை, பள்ளி கொண்டான் அணை, மண்டைக்காடு, வெட்டுமடை, சின்னவிளை, மிடாலம், குழித்துறை ஆறு, திற்பரப்பு அருவி, தேங்காய்ப்பட்டணம் கடல் ஆகிய இடங்களில் சம்பந்தப்பட்ட ஊராட்சி அமைப்புகள் மூலம் மின்விளக்கு வசதிகள் ஏற்படுத்த உதவி இயக்குநர்கள் பேரூராட்சி மற்றும் ஊராட்சி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், விநாயகர் சிலை ஊர்வலம் நடைபெறும் நாட்களில் குடிதண்ணீர் வசதி

செய்து கொடுக்க நகராட்சியினரால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், விநாயகர் சிலைகள் கரைக்கும் இடங்களில் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மற்றும் மீட்பு பணிகள் மேற்கொள்ள, மீன்வளத்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் கடந்த வருடம் விநாயகர் சதுர்த்தி விழா மற்றும் விசர்ஜன ஊர்வலம் அமைதியாக நடந்ததை போல இவ்வருடமும் அமைதியாக நடத்திட அனைத்து அமைப்புகளும், ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. கு.தர்மராஜன் இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு. எஸ். இளங்கோ, நாகர்கோவில் கோட்டாட்சியர் திரு. ஆர். ராஜ்குமார், துணை காவல் கண்காணிப்பாளர்கள் திரு. பாலமுருகன், திரு. எஸ். வெங்கட்ராமன், திரு. ரெத்தினவேலு, வட்டாட்சியர்கள் திரு. எ.வி. மூர்த்தி, திருமதி. புவனேஸ்வரி, திருமதி. ஷீலா, திருமதி. முத்துலெட்சுமி, மீன்வளத்துறை உதவி இயக்குநர்கள் திரு. ரூபர்ட் ஜோதி, திரு. நாபிராஜ், திருவிதாங்கோடு முஸ்லீம் ஜமாத் தலைவர் திரு. எம்.ஷாகுல்ஹமீது, திருவிதாங்கோடு முஸ்லீம் ஜமாத் நிர்வாக குழு உறுப்பினர் திரு. எம்.எஸ்.அலிகான், துணைத்தலைவர் திரு. ஷரிப்ஹூசைன், புனித அந்தோணிய ஆலயத்தின் செயலாளர் திரு. எஸ். பிரைட் சிங், மாதவலாயம் முஸ்லீம் ஜமாத் தலைவர் திரு. மாஹீன் அபுபக்கர், அகில பாரத இந்து மகாசபை சார்பாக திரு. கோவிந்தன், வழக்கறிஞர் திரு. எஸ்.பி. அசோகன், திரு. பெரியசுவாமி, திரு. ராஜேஸ்வரன், திரு. முருகேஷ், திரு. செல்வராஜ், பாரதீய ஜனதா கட்சி சார்பாக திரு. பி.ஐயப்பன், திரு. மகாதேவன்பிள்ளை ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.